<u>நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>

<u>சி.சி.எண். 82/2020</u>

2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 6 வது நபரின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி.அலமேலு, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மனோஜ்குமார் | வயது | 39 |
| த.பெ.(அ)க.பெ. | கருணாமூர்த்தி | தொழில் | முதுநிலை மருத்துவர் |
| ஊர்/பணிபுரியுமிடம் | திருப்பத்தூர் | சமயம் | |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

**<u>முதல் விசாரணை</u>. எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை.**

நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் முதுநிலை மருத்துவராக பணி செய்து வருகிறேன். கடந்த 03.07.2018 அன்று பகல் 02.30 மணிக்கு நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது திரு.கிருஷ்ணன் த/பெ. சண்முகம் என்பவரை அவரது மனைவி ஈஸ்வரி அழைத்து வந்தார். 03.07.2018 அன்று மதியம் 12.00 மணி அளவில் தன்னை 2 ஆண் 1 பெண் தன் நிலத்தின் அருகே கத்தியாலும், கையாலும், காலாலும் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது அவருக்கு முன்நெற்றியல் 3x2x1 செ.மீ காயம் இருந்தது. அவரை மேல்சிகிச்சைக்கா தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மேலும் அங்கு அவருக்கு சி.டி ஸ்கேன் எடுத்ததில் அவருக்கு முன் தலைப்பகுதியில் லேசாக வீங்கி இருந்து. மேலும் அவருக்கு தருமபுரி அரசு மருத்துவமனையில் முகம் முழுவதும் சி.டி. ஸ்கேன் எடுத்து பார்த்த போது இடது புற தலையில் காதுக்கு மேல் பகுதியில் லேசாக விரிசல் இருந்தது. மேற்படி நான் அவரை பரிசோதித்தன் அடிப்படையிலும், தருமபுரி அரசு மருத்துவமனயில் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரி மற்றும் சி.டி. ஸ்கேன் ஆகிய ஆவணங்களின் அடிப்படையில் நோயளிக்கு ஏற்பட்ட காயம் சாதராண காயம் என்று சான்றளித்தேன். மேற்படி கருத்துறையுடன் கூடிய **காயச்சான்றிதழ் அ.சா.ஆ. 4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. தருமபுரி அரசு மருத்துவமனையில் வழங்கிய **டிஸ்சார்ஜ் சம்மரி அ.சா.ஆ.5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–</u>**

கரடுமுரடான பகுதியில் மற்றும் கூர்மையான ஆயுதத்தின் மீது விழுந்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். வெட்டுகத்தியால் வெட்டினால் கிழிந்த காயம் அல்லது வெட்டுகாயம் மட்டும் தான் ஏற்படும் என்றாலும் சிதைந்த காயம் ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால், எல்லா நேரங்களிலும் அது பொருந்தாது. என்னிடம் போலீசார் ஆயுதமோ, வெட்டுகத்தியோ என்னிடம் காண்பித்து கருத்துரை பெறவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை–** இல்லை

சாட்சியின் கையொப்பம்